முருகப்பெருமான் துணை

# மகான் வாயிலார் நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

07.06.2021, திங்கட்கிழமை

1. தவசியே ஆறுமுக ஞானியே
தன்னார்வ தொண்டர் படைகளை
அவனியெங்கும் பரப்பி இனிதே
ஆளுமை ஞானவழி உருவாக்கவந்த
2. வந்தநல் ஆறுமுக அரங்கனே
வள்ளலே உன் பெருமை கூறி
சிந்தைபட பிலவ விடை திங்கள்
செப்பிட அறுநான்கு திகதி சோமவாரம்
(பிலவ வருடம் வைகாசி மாதம் 24ம் நாள், 07.06.2021 திங்கட்கிழமை)
3. வாரமதில் வாயிலார் நாயனாரும்
வழங்குவேன் உலகநலம் காண
சோரம் நீக்கி உலக மக்களை
சுத்த ஞான வழிகள்தனை காட்டி
4. காட்டியே உலகமாற்றம் செய்ய
கருணை கொண்டருளும் தேசிகனே
வாட்டம் நீக்கி காக்கும் உன்
வள்ளல் நெறியை விட்டகலா
5. அகலா உலகமக்கள் வர
அன்னதான நெறியினை ஏற்றும்
வகைபட உலகமெங்கும் செய்து
வையகத்தார் தொடர்ந்து வர
6. வருகவே படிப்படியாய் மாற்றம்
வளமான சூழலாக மாறும்
தருமபலம் கூடியே பெருகபெருக
தரணியே பாதுகாப்பு உண்டாகும்
7. ஆகவே அரங்க ஞானியரின்
அருளாசி அடைந்து மக்கள்
வகைபட ஞானிகள் பூசை
வழுவாது செய்து கொண்டு வர
8. வருகவே இறைபலமுடன்
வந்தடையும் ஞானவான்களெனும்
பெருநிலை கண்டு உலகோர்
பேராசான் தயவால் சிறப்பர்
9. சிறப்புதரும் உயர் ஞானியே
செப்பிட சைவ நெறி எனும்
மறுப்பிலா சிவ நெறி ஏற்று
மண்ணுலகில் ஞானம் வழிதொடர

10. தொடர கோளிடர் வினைகள்
தொல்லை தரும் பேரிடர்கள்
இடைகண்டம் யாவும் விலகி
ஏற்றமும் நல்ல மாற்றமும் தேற்றமும்

11. தேற்றமும் கண்டு உயர்வர்
தேசிகன் ஆசிபட நடக்க
மாற்றம் சடுதி உலகம் அடையும்
மொழிந்திட்ட யோகபிரசன்ன ஆசிமுற்றே

–சுபம்–